
IC XC
ST. RICHARD

ஏப்ரல் 3

# புனித ரிச்சர்ட் (1197-1253)

புனிதர்கள் பலரைப் போல இருவரும் இளமையிலிருந்தே புண்ணி வாழ்வை நாடினார். பிறருக்கு சேவை செய்வது இவருக்கு பேரானந்தம். இவர் கல்வி கற்கும் போதே உற்ற நண்பர் இருவரோடு தவ வாழ்வு நடத்தி வந்தார். இவர் குருப்பட்டம் பெற்று ஆயரானார். இவருக்கு அநேக தொல்லைகள் ஏற்பட்டன. சிறிது அமைதி ஏற்பட்டதும், மக்களை புண்ணியவான்களாக்குவதில் முனைந்து நின்றார். திருச்சபையில் கட்டுப்பாட்டைக் காத்தார். ஏழைகள் மீது மிகுந்த அன்புள்ளவர். இயேசு வாழ்ந்த புண்ணிய பூமியை மீட்கும்படி ஒரு போர் தொடங்க வேண்டியிருந்தது. அதைப் பற்றி ஊர் ஊராய்ப்போய்ப் பிரசங்கிக்கும்படி பாப்பானவர் இவருக்கு கட்டளையிட்டார். அந்த வேலையைச் செய்யும்போது இவர் இறந்தார்.

சிந்தனை:

கடவுள் சொன்ன சொல் தவறுவதில்லை. ஆர்வத்துடன் அவருக்கு சேவை செய்வோமானால் நமது தேவைகளை அவர் கவனித்து கொள்வார். (புனித ரிச்சர்ட்)

செபம்:

ஆண்டவரே, திருச்சபையின் மீதும் உலகத்தின் மீதும் இரக்கமாயிரும்.